688

ஜீவகாருண்ய

இதங்கள் ::

T. S. ஸ்ரீபால்.

ஸ்ரீ

ஜீவகாருண்ய கீதங்கள்

இயற்றியவர்

திரு T. S. ஸ்ரீபால் அவர்கள்

(சொற்பொழிவாளர்)

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபை, சென்னை.

1935

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபை,

436, தங்கசாலைத் தெரு,

சென்னை.

காபிரைட்.] [விலை அணு 1.

ஜீவகாருண்ய சக்தி துணை.

ஜீவகாருண்யச் சிறப்பு.

(1)

இராகம்—கதனகுதூகுல—தாளம் ஆதி.

(ரகுவம்ஸசுதா என்ற மெட்டு)

பல்லவி.

கருணாகரனே கைலைவாசனே
கரங்குவித்தேன் நேராய் கதியருள் தாராய்

அநுபல்லவி.

சரணமாகியின்று சற்குணம் பயின்று
சமரசமா யன்பு சாற்றினேனே நின்று (க)

சரணம்.

விரதமேது வேறே விண்ணோரேற்றுஞ்சீரே
வேண்டினேனே கொல்லா விரதமோதும் பேரே
பரதம் போற்றுந்தர்மம் பல்லுயிர்க்குமின்பம்
பண்பிணைபயக்கும் பழவினைகள் போக்கும் (கருணா)

(2)

இராகம்—சுருட்டி—தாளம் ஆதி

(கீதார்த்தமு என்ற மெட்டு)

பல்லவி.

தேவாதி தேவாநின் பாதாரவிந்தம்
சேவை பரமானந்தம் நீதம்

அனுபல்லவி.

ஜீவகாருண்ணிய சீலமே பெற்றவர்
தாவாதயின்பம் தானெய்துவரெனுந் (தே)

சரணம்.

உடலெலாமுயிரெலாம் உணர்வெலாமுள்ளமெலாம்
உனையன்றி வேறுளதோ ஒளிதரும் பொருளே
படிதனிலுயிர்தமை பரிந்துப சரிப்போரை
பணியமனம் பரவும் பாசமே தந்தருளும் (தே)

(3)

இராகம்—ஷாமா—தாளம் ஆதி

(சாந்தமுலேகா என்ற மெட்டு)

பல்லவி.

தாமரை பாதா தனிபெரும் வேதா
சார்ந்தவர்க்கருள் போதா (தாமரை)

அனுபல்லவி.

பூமானே உயிரெலாம் பொருந்தியுளாய் நீயே (தாமரை)

சரணம்.

ஆருயிர் தமக்கன்பு ஆற்றமோ ரருந்தொண்டு
பேருள் அறிய பித்தமானேன் புரிய (தாமரை)
தீமை புரியுஞ் சிறு தெய்வமெனும் பொய்யில்
காமுற்றமுந்தி மீளா கயவரைக் காருஞ்சீலா (தாமரை)

(4)

(தொலி நேநு சேயு பூஜா என்ற மெட்டு)

பல்லவி.

கலைவாணரே கதிவேண்டியே
கொலை விடுவீர்

அனுபல்லவி.

புலானுண்ணுவார் புண்ணியராகார்
போதமுற்றாலும் பூஜித்தாலுமென் (க)

சரணம்.

பரமாத்மனே பல்லுயிர் மேவி
பதிகொண்டுளா ரிதுஉண்மையால்
தருமம் பெற்றய்ய தயைமூலமென்றே
தன்னுயிரைப்போல மன்னுயிரையெண்ணும் (க

(5)

இராகம்—பந்துவராளி—ஆதி தாளம்.

பல்லவி.

சுகமிதில் பாரய்யா சுரர் பதமேதரும் (சுக)

அனுபல்லவி.

தகுபரம்பொருளாம் தனியவன் பாதம் நினை (சுக)

சரணம்.

இறைவனாலயமதாய் இலங்கு முயிரனைத்தும்
உறையுகம் முயிரென உகந்திருந்திடுமன்பால் (சுக)
அனித்திய உடல்தன்ம பிணத்தினால் பெருக்காது
இனிக்குங் காய்கனியுண்டு இகபரலோகமெங்கும் (சுக)

(6)

1. மிகவும் மேன்மையானது எது?

ராகம் புன்னாகவராளி.

(1) நாட்டிலே மிக மேன்மை
யாதென்று தேடி—ஓடி
நானலைந்தே னெங்குமொரு
பித்தன் போலாடி
கேட்டே நீதிஸ்தலங்க
ளெங்கு நின்றேன்—அங்கு
கிளத்தினர் சட்டத்தையே
விட்டுச்சென்றேன். (நா)

(2) ஓதுங்கல்விச்சாலைகளில்
நம்பி நுழைந்தேன்—அங்கு
உரைத்தார் புத்திக்கூர்மையே
ஒதிங்கிவந்தேன்
தீதுதீரறிவுடை
யாரிடங் கேட்டேன்—அவர்
தீரமாய் சத்திய மென்றார்
திரும்பிவிட்டேன். (நா)

(3) அறிவிலா னெதிர்பட்டான்
குறை அறைந்தேன்—அவன்
ஆடிக் களியாட்ட மென்றான்
மனமுறிந்தேன்
சிறந்த பேரழகிளம்
மாதைக்கண்டேன்—புன்
சிரிப்புடன் காதல் என்றாள்
வெட்கமுண்டேன். (நா)

(4) ஆண்மையாகச் செல்லுமொரு
காளையைப் பார்த்தேன்—அவன்
அழகு அழகு என்றான்
அங்கம் வியர்த்தேன்
தூண்போல் தோளுடைப் படை
வீரனை விண்டேன்—அவன்
துணிவாகக் கீர்த்தி யென்றான்
துன்பங் கொண்டேன். (நா)

(5) தேசாபிமானிகளை
விண்ணப்பித்தேன்—அவர்
தேர்ந்த சுதந்தர மென்றார்
மிகநகைத்தேன்
தாசனுய்ச்சென்று ஞானி
காலில் விழுந்தேன்—மிக
தாமதித்து நீதி என்றார்
மனங்குழைந்தேன். (நா)

(6) முனிவர் பெருமானை
வணங்கி நின்றேன்—அவர்
முக்தி யென்றுரைக்க
முகம் வாடிச் சென்றேன்
இனி பதிலுரைப்பவ
ரிங்கிலை யென்றே—என்
இருதயம் வருத்தமா
யுரைத்ததன்றே. (நா)

(7) ஒன்றுந் தோன்றாது
கடலோரந்தனிலே—வாடி
உண்மையைச் சிந்தித்
திருக்கும் வேளையினிலே

என்று மிலானந்தத்துட
னுள்ளத்தினின்றே—சப்தம்
எழுந்தது அன்பு அன்பு
அன்பு தானென்றே. (நா.)

(7) எழுந்தேன் தொழுதேன்மிக
துள்ளி குதித்தேன்—அன்பு
என்றெழுதி தெய்வமென
வாழ்த்தித் துதித்தேன்
பொழிந்தே னானந்த கண்ணீ
ரென்னை மறந்தே—அன்பால்
போற்றுங்களெவ்வுயிரையும்
மேன்மையறிந்தே. (நா)

---

(7)

ஆடுகள் முறையீடு.

ஊமைப் பிராணிகளாகிய எங்களைக் கத்தியினின்றுங் காப்பாற்றுங்கள்.

ஹரிகாம்போதி ஜன்ம் ராகம்.

ஸைந்தவி—தஸ்ர சாப்பு தாளம்.

(கரும்பு தோட்டத்திலே என்ற மெட்டு)

பல்லவி.

கத்தியினின்றுங் காப்பீர்—ஆ
கத்தியினின்றுங் காப்பீர்

சரணம்.

(1) கத்தியினின்றுங் காப்பீர்—எங்கள்
கால்களுந் தலைகளும் அற்றுவிழும்படி

வெட்டிமடிப்போரே—நீர்
விழையும்வாழ் நாட்களின்வழியின் தொடர்ச்சியில்
சற்றே நின்றுபாரும்—கொலை
சரியாகுமா தெய்வ சம்மதமா வென்று
சித்தந்தனில் தேரும்—துயரைச்
செப்ப முடியாத ஊமைப் பிராணிகளை
(கத்தியினின்றுங் காப்பீர்)

(2) இரக்கமென்பதில்லையோ—ஆன்மா
ஏங்கித்திகைத்துத் துடித்து விம்முந்துயர்
உருக்குமெம் கண்களிலே—காணும்
உயிர்ப்புடன் படபடவெனப் பந்தடித்திடும்
இருதயசப்தங் கேளீர்—ஐயோ
இரக்க மின்னதெனவறிபிரோ உங்களை
திருப்புதல் வீண்தானோ—யாங்கள்
திக்கற்ற கைதிகளென்று விடுவித்து
(கத்தியினின்றுங் காப்பீர்)

(3) மேகக்கூட்டஞ்சூழும்—தளிர்
மேவு மரங்களின் குளிர்ந்த நிழலிலும்
வேகப்பசி தீர்க்கும்—புல்
வெளிகளிலும் பனி சூழ்ந்த மலையிலும்
ஆகா எல்லையற்றே—பெரும்
ஆழிபோலும் வேகக்காற்றைப்போலெங்குமே
சோகமின்றித்திரிவோம்—இந்தச்
சுயேச்சையாய் ஜென்மபூமியில் வாழ்மைமை
(கத்தியினின்றுங் காப்பீர்)

(4) மக்களெனும் பெரியீர்—பெரும்
மாண்புமிக்கபுண்ய ஜென்மபூமி நின்றும்

சொக்கும்படி பிரித்தே—எங்கள்
சுதந்தரச் சிறகினை முறித்துக்கால் களிலே
தக்க விலங்கிட்டீர்—இந்தத்
தகாதன செய்யுமுங்கள் மனதிலே
துக்க முகத்தாலே—யாங்கள்
சோர்ந்து வேண்டுங்குறி கவனித்தீர்களில்லை
(கத்தியினின்றுங் காப்பீர்)

(5) அடிமைத்தனம் பூண்டே—உங்கள்
ஆக்கினைக்கடங்கினோ மெவருக்குமே யொரு
கொடுமை நினைத்தறியோம்—பச்சைக்
கொடிகளுந் தழைகளுமேய்ந்து பாலுமக்குப்
படிமைபோல் நின்றளிப்போம்—எங்கள்
பரோபகாரத்தைச் சற்று நினையாது
கடுமையாய் வெட்டுகின்றீர்—இது
கலிகாலக்கூத்தோ தலையினெழுத்தோ
(கத்தியினின்றுங் காப்பீர்)

(6) ஆண்டவன் முன்னாலே—உங்கள்
அன்பும் அருளும் அளிக்கவேகேட்டிலோம்
வேண்டிநின்றோம் நியாயமே—இதனை
வீணென்று தாசீனஞ்செய்து விட்டோடாதீர்
தூண்டும் மனசாட்சியே—ஐயா
துன்பமெவர்க்கு மொன்றெண்ணு தெம்முயிரை
ஆண்டுவாரீர் தரும்பாய்—ஏழை
அழுதுவிடுங்கண்ணீர் மண்ணிற் கலக்குமோ?
(கத்தியினின்றுங் காப்பீர்)

(7) வாரும் மஹாவீரரே—புவியில்
வாயில்லாப் பிராணிகள் மாயுது மனிதரால்

சேரும் மஹான் புத்தரே—புலால்
செறிந்த வயிற்றினராஞர் மாந்தர் பலர்
பாருந்தாயுமாஞரே—அந்தோ
பாழுஞ் சிறுதெய்வங்கள் கோயில்முன்னுயிர் பலி
ஒரும் (இ) ராமலிங்கரே—நீங்கள்
உலகினிற்தோன்றி கொல்லாமை போதித்தெமை

(கத்தியினின்றுங் காப்பீர்)

---

(8)

தெய்வ அசரீரி.

(வந்தேமாதரம் வந்தேமாதரம்—என்ற மெட்டு)

பல்லவி.

அஞ்சேல் ஆடுகாள்! அஞ்சேல் ஆடுகாள்!
இன்றே காத்திடுவோம்

சரணம்.

தஞ்சமென்றே தலை தாழ்ந்து பணிந்தழும்
தன்மையினைக் கண்டே—மாந்தர்
நஞ்சின் கொடியராய்க் கொல்லுகின்றுரும்மை
நாணந்தன்னை மீண்டே—துயர்
மிஞ்சிஞு மானிடர் வெட்கமுறும்படி
மிக்க சாந்தம் பூண்டே—பெரும்
வஞ்சனைக்காரர்க்கு வாய்மை யுரைக்கின்றீர்
வண்மையறங்கொண்டே—இனி

(அஞ்சேல் ஆடுகாள்)

மன்னுயிர் யாவும் மகிழ்ந்து குலாவிட
மண்ணுலகம் பொதுவே—அரும்
பொன்னுடல் படைத்த மானிடராயினும்
புழுவிற் குரியதுவே—உயிர்
முன்னமாற்றிய வினைப்படி ஆயுளை
முடிக்க யெமன் பொதுவே—இவன்
அன்றி வேறொருவருங்களைக் கொன்றிடி
லழிவாருண்மையிதுவே—இனி
(அஞ்சேல் ஆடுகாள்)

ஊமைக் குழந்தைகளாயினு முங்களை
உதாசீனஞ் செய்யவில்லை—மாந்தர்
தீமைப் புரியும்போதழுது விம்முங்குரல்
செவிதனிற் கேளாதில்லை—இதோ
தாமதமின்றிப் பிறந்துத் தரையினிற்
தடுப்போமுங்கள் தொல்லை—உயிர்கள்
க்ஷேமமுற்று வாழும் வாழ்க்கையே யெங்கள்
க்ஷேமமே வேறில்லை—இனி
(அஞ்சேல் ஆடுகாள்)

(9)

மிருகங்கள் மனிதர்களை வினவுதல்.

ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

எங்களைக்கொல்வோரே வாரும்—உம்மில்
எவ்வகையில் தாழ்ந்தோ மென்பதைக்கூறும் (எ)

சரணம்.

எந்த உயிர்களுமொன்றே—அதில்
எற்றந்தாழ்வென்றொரு வேற்றுமையன்றே

முந்திசெய் பாவபுண்ணியம்—உயிர்
மூடிக்கொண்ட உடலாலேதான் பேதம் (எங்)

அறிவில் குறைந்தவரன்றி—மற்ற
அச்சம் ஆகாரம் இணைதலோடொன்றி
உறக்கத்திலும்மில் குறைவோ—பகுத்
துணர்விலா மானிட ரெம்மில் உயர்வோ (எங்)

தாய்தந்தை தனயர்கள்கூடி—அன்பாய்த்
தாவிக்குதித்தணைத்தாடுவோம் ஓடி
காய்கனிதழை தமைக்கொண்டு—சேயை
காத்திடுந் தாய்ப்பணி யெமக்குந்தானுண்டு (எங்)

பொறுப்புடை நட்பினைப்பூண்போம்—இந்தப்
புவியிலெவரும் நிகராகாரென்போம்
விருப்பமிகுத்துவாழ்வோமே—எம்மில்
வேறாகிப்பிரிவுற்றால் விசனத்தாழ்வோமே (எங்)

உறுபுலி சிங்கங்கள்போலே—நாங்கள்
ஒருவருக்குந் தீங்கிழைக் காததினாலே
பொறுமையாயும்மோடுழைத்தே—இந்தப்
புவியில் வாழப்பிரம்மன் விடுத்தான்படைத்தே (எங்)

குருடன் விழிபெற்றார்போலே—உங்கள்
கூட்டுறவால் களித்தாடுவோமேலே
அறியோமுங்கள் வஞ்சநெஞ்சம்—ஐயோ
யாரையும் நம்பியடைவோமே தஞ்சம் (எங்)

ஆபத்தின்னதென்றறிவோம்—மெள்ள
அதினின்று நீங்கும் வழியை முயல்வோம்
கோபத்தண லெமக்குண்டு—அதைக்
கொள்ளோமுமைப்போலெம்மேலாரைக்கண்டு (எங்)

பேசத்தெரியாதாரென்று—எம்மைப்
பிரித்துப் பேசாதீரெம்பாவைதான் வேறு
நேசமாய்க்கூடுங்காலத்தே—வெகு
நேர்மையாய்ப்பேசுவோ முகமுகம்வைத்தே (எங்)

துஷ்டர்தமை நெருங்கோமே—காணில்
தூரத்தினின்றுங் கதறிடுவோமே
கஷ்டங்களுண்டானபோது—அதைக்
காட்டுவோம் கண்களில் நீரையுகுத்து (எங்)

என்ன! ஏன்! என்றனதத்தேற—மனம்
எண்ணிடு முறுதியாய்ச்சந்தேகமற
இன்னிசைக்கீதங்கள் கேட்டு—வெகு
இன்பமாய் வருவோமே யிரையையும்விட்டு (எங்)

மாலை மஞ்சள் வெய்யிலொளியும்—வரும்
மாயிருள்போக்குஞ் சந்திரனொளியும்
கோல நட்சத்திர ஒளியும்—காணில்
கொண்டாட்டத்திற் களவுண்டோ உரையும் (எங்)

பசுங்கிளி பூட்டித் தேரேறி—அனங்கன்
பாரின்வரவினை தென்றலுங்கூறி
பசுந்தளிர்விட்டு மரங்கள்—பூத்துப்
பரிந்துவரவேற்பபோலசைந்தாடும் (எங்)

வசந்தகாலம் வரக்கண்டே—யாங்கள்
வாழ்த்தி வணங்கிக்குதிப்பதுமுண்டே
இசைகொள் வண்டினங்கள் சூழும்—மலர்
விரியுமணத்திற்கெம் மணமும் விரும்பும் (எங்)

வாடிக்கையாகநம்பின்னே—தினம்
வருவோம் சிறுவர்போல் பழக்கிடிலண்ணே

வேடிக்கையாட்டங்கள்கற்று—வெகு
விந்தையாய் நடிப்போமே பயமெலாமற்று (எங்).

எங்களைக் கொன்றிடவெண்ணி—நீங்கள்
எவ்வாறு வாளெடுக்கின்றீரோ நண்ணி
பங்காளியாகவே வந்து—உம்மைப்
பாகங்கொடுவென்று கேட்டோமா நொந்து (எங்)

இரக்கமோ டன்பிலாமுகம்—வெறும்
இரும்புக் குண்டிலேழு துவாரங்களாகும்
உருக்குதெங்கள் மனமையோ—நாளை
உமக்குவருந் துன்பமெண்ணும் போதையோ (எங்)

கொலைப்பிசா சும்மையாட்டி—நாளைக்
கொண்டுபோகும் நாகவேந்தன் முன்கூட்டி
தலைமைப் பிசாசிது வென்றே—அங்கு
தருவார் வெகுமதி முதலாவ தென்றே (எங்)

அந்தப் பாழ் நரகத்தே நின்று—இந்த
அவனியி லிவர்களைப் பிடிப்பது போன்று
எந்த மாந்தரையு மையா—பிடிக்க
இயலாதென பிசாசேகிடுமையா (எங்)

நல்லறங்கொண்டு வாழ்வோரே—இன்ப
நல்லுலகடைபவ ரென் றறிந்தின்றே
கொல்லாவிரதங் கைகொண்டு—இந்தக்
குவலயத்தில் வாழும் புகழ்மிகப் பூண்டு (எங்)

(10)

கொலையுண்ட
மிருகங்களின் அசரீரி.

மாமிசக்கடையில் நடக்கும் கோரஹிம்ஸைகள்.

நொண்டிச்சிந்து.

1. மனிதர்களே கேளீர்—இழி
மாமிஸம் புசிக்க நீர் மனங்கொள்ளவே
சனியன் பிடித்ததெமையே—அந்தோ
சண்டாளப் பிரமனெம்மை யேனோ படைத்தான்
பனிக்குதுரைக்க நெஞ்சமே—நீங்கள்
பணங்கொடுத் தெம்முடலாம் பிணம் வாங்கியே
இனிதாகச் செல்லுகின்றீர்—யாங்கள்
இங்ஙனமடைந்த பெருமிம்ஸையைச் சற்றே (மனி)

2. கடுங்கொலை பல புரிந்தே—நெஞ்சம்
கல்லினுங் கனத்ததாலப் பாழுங்கொலைஞர்
கொடுமைவாள் கையிலேந்தி—யாங்கள்
கொஞ்சிவரும் வாழ்நாளின் குறுக்கேநின்று
திடுக்கிடப் பிடித்திடுவார்—வேறு
செய்வதறியாதெங்க ளினம் நினைத்தே
நடுங்கி உடலஞ்சிலிர்த்தே—நிற்க
நமன் தூதர்போல் நால்வர் சேர்ந்திழுப்பார் (மனி)

3. உயிரின்மே லுளவிருப்பால்—அவர்கள்
உரமுடை தோளின்தன்மை யோராதிழுப்போம்
வயிற்றினைச் சேர்த்தணைப்பார்—மேலும்
வலிவுடனிழுத்துக் காலுதைத்துக் கொண்டே
அயர்ந்து போம்வரை முயல்வோம்—பின்னே

அடைக்கல மாவோமென்று தலைநிமிர்ந்தே
பயமுடை கண்களாலே—யாங்கள்
பார்க்கும் பரிதாபத்தைப் பாராதிகழ்ந்தே (மணி)

4. இழுத்தெமை முன்னேநிறுத்தி—யாங்கள்
இரைந்து அலறும் பெருமூச்சினிடையும்
அழுத்திப் பிடிக்கும் வலியின்—இடையும்
ஆயுள் பிரிவெண்ணிவிடுங் கண்ணீரிடையும்
புழுங்கிக் கதருமிடையும்—அந்தோ
புலையும் ரத்தமுந் தோய்ந்த கத்தியாலோங்கி
கழுத்தினிடையே வெட்டுவார்—துண்டாய்
கழுத்து முடலும்வேறாய்த் துடித்திடுமே (மணி)

5. கோரமினியும் வேண்டுமோ—ஐயா
கூறினேஞ் சுருக்கமாய்க் கொண்டதனேகம்
பாரினிற் கொலையுண்டு—யாங்கள்
பாவிகள் நிலைகண்டபின் பிறப்புவேண்டி
ஊருரா யுருவமின்றே—சுற்றி
ஓடினேங் கடையினிலாழ் நரகத்திலே
கூரிய விரும்பைக்காய்ச்சி—எம்மைக்
கொன்றவரைப் பேய்கள் பல குத்தக்கண்டோம்
(மணி)

6. அங்க முருகுதையா—எங்கள்
ஆருயிருங்கள் கரத்தடைந்துளதால்
பொங்குறும் புலால் விடுவீர்—இலையேல்
புறப்படு மொருநாளை நீதிதெய்வமே

பொங்கி சண்டமாருதம்போல்—சீறி
போற்றுமுங்க ளாத்துமன்மேல் புகுந்தடித்தே
சங்கடங்கள் பல பண்ணும்—இது
சத்தியம் சத்தியம் சொன்னேம் சத்தியமே (மணி)

(11)

ஓர் ஆட்டின் உணர்ச்சி.

பூஜேரிபட்டி என்ற கிராமத்தில் ஒரு பூசாரி மாரி யம்மனுக்குப் பலியிட ஒரு ஆட்டை எதிரே நிறுத்தி அதை வெட்ட வாளை ஓங்கினான். உடனே அந்த ஆடு ஆவேசத்தோடு பெருங்குரலால் கதறித்துள்ளி பூசாரியின்



மார்பை ஒரு காலால் உதைத்துக்கொண்டும் மற்றொரு காலால் கத்தியைப் பிடித்திருந்த கையை ஓங்கவொட்டாது தடுத்துத் தாழ்த்தி நின்றும் கதறிற்று.

இந்த ஆச்சரியகரமான சம்பவத்தின் நிலைமையைக் குறித்துப் பாடியது.

(அச்சமில்லை அச்சமில்லை என்ற மெட்டு).

அடே பாவி! அடே பாவி!!
அழியக் காலம் வந்ததோ
விடேனுன்னை விடேனுன்னை
வீரங்குன்றும் வரையிலும் (1)

திடீரென்று கத்தித்தீட்டி
தீயா வெட்டவந்தனை
படீரெனவே மார்துடித்துப்
பதைக்குஞ் சப்தங்கேளடா (2)

நெஞ்சில் சற்று மிரக்கமின்றி
நீசனே வாளோச்சினை
வஞ்சகா உன் வாழ்வின் வழியில்
வாள்வரின் விழிப்பையே (3)

ஏது குற்றமுனக் கிழைத்தேன்
இந்தப் பகைமை பூண்டனை
வாதுசெய்துன் பொன் பொருளை
வஞ்சிக்கவு மெண்ணிலேன் (4)

பாதகா நீ வெட்டுங் காலை
பதறிப் பாதம் பணிந்துமே
ஆதகாதெனத் தடுத்து
அறமுரைக்க வாயிலேன் (5)

வீரமாக வாளை யேந்தி
　வெட்டி வீழ்த்த வருகையில்
தீரமாகநின் றெதிர்க்கத்
　திறனுமற்றப் பாவியேன் (6)

கூட்டமிகு மாந்தரிடை
　கொன்றிடவே நின்றனே
வாட்டமோடு நிற்குமென்னை
　வந்து மீட்பாரில்லையே (7)

உற்றார் பெற்றா ரொருவரில்லை
　ஒண்டியாக நின்றிட்டேன்
குற்றமற்ற வென்னைக்கொல்ல
　கூறிற்றென்றாய்த் தெய்வமே (8)

தெய்வமென்ப தெவ்வுயிர்க்குந்
　தேர்ந்ததொன்றே யறிகுவாய்
ஐய! நீ பலியாய் என்னை
　அறுப்பினம்மன் வெறுக்குமே (9)

தோழா! என்னைக் கொல்லுமுன்னே
　தொழுதேன் வரமொன்றளியுமே
ஏழை எங்களுயிரைத் தெய்வம்
　ஏற்பதுண்மை யாகிடில் (10)

வீரா! வாளால் வெட்டிடாது
　விளங்குந் தெய்வந் தன்னையே
நேரா யெங்களுயிரை வாங்க
　நிலம் பணிந்து கேளுமே (11)

உங்கள் மக்களோடு நீங்கள்
　உற்றநோய் தமக்கெலாம்
எங்கள் மக்களோடு யாங்கள்
　ஏதுசெய்தோ மதியிலாய் (12)

உயிர் பலிக்கு உயிர் கொடுக்க
உலகில் தெய்வமில்லையே
வயிறுபற்றி யெரியுதிந்த
வாளை வீழ்த்தி மீளையா (13)

அழுவதோ நகைப்பதோ உன்
அறிவிலாத செய்கைக்கே
விழுவாய் நரகம் நாளையே! நீ
விடுவாய்க் கொல்லுந் தொழிலையே.
(அடே) (14)

(12)

இராகம்—அடாணா.

(1) துட்ட தேவதையென் றுயிர்க் கொல்லுங்கோரம்
தூத்தூவெனத் தூற்றி தொலைத்திட வாரும்
விட்ட பிறவியில் மூண்டவினையோடு
வேறிந்தப் பாவமும் விளைத்திடுங்கேடு (துட்ட)

(2) ஊமைப்ராணிகளின் உயிர்தனை மாய்த்து
உதிரங்குடிப்பதாய் மாந்தரை யேய்த்து
தீமை புரிகின்ற தீய வழக்கத்தால்
தேசமதம் புகழ் தீரத் தொலைவதால் (துட்ட)

(3) பால் தரும் பசுவோடாடெருமைகள் போலே
பன்றி கழுதையும் பகைகொள்ளாதுயிர்மேலே
வேல் சூலங் கரத்தேந்தி விளங்குமத் தெய்வம்
விலங்கினுந் தாழ்ந்ததோ விளம்பு முத்தாரம் (துட்ட)

(4) மருளாளி மனிதனும் மனிதனுமன்றே
மாண்பாளன் மறையாளன் மதியாளனன்றே
அருளாளர் நெறியினை அழிக்குமோர் பாவி
ஆயிரஞ் செய்தாலும் அணுகுமோதேவி (துட்ட)

(5) இருவர் பிடித்தாலு மிரைந்தாடுங் காட்சி
எவரேயறிவாரப்போலியின் சூழ்ச்சி
ஒரு விவரமு மறியாம லவன் பின்னே
ஓடி உயிர்மாய்க்கும் சனந்தானென்னே (துட்ட)

(6) மன்னுயிர் யாவையுந் தன்னுயிராமென்றே
மதிப்பவர் மனத்தினிலிறைவனுளானென்றே
முன்னோ ருரைத்ததோர் முதுமொழி மறந்தே
மூடபக்திதனில் மூழ்குவோரே யிந்த (துட்ட)

(7) சாத்திரவேத புராணங்கள் மூலம்
சாற்றுவரோ பலிக்காதாரங் கேளும்
நாத்திகருஞ் செய்யா நமனினுங் கொடிய
நடுக்குறும் பாவியர் மதத்தினில் புகுத்திய (துட்ட)

(13)

(கந்தா காருண்யமே என்ற மெட்டு).

ஜீவகாருண்யமே ஜென்ம புண்ணியமே
பூவில் வாழுயிர்கள் புகல் கண்ணியமே

தேவராதி யானவரும் பாவலர் நாவலர் மற்றுங்
காவலர் ஞானிகளோடு மேவிய தவராஜர்போற்றும் (ஜீவ)

மாட்சிமைப் பெறுவதற்கு சாட்சிநற் கருமமென்றே
சூழ்ச்சியா லறமறிந்து காட்சியாய் கொண்டாடநன்றே
மனித ஜென்மமொன்றே மதி நிறைந்ததொன்றே (ஜீ)

ஆருயிரனைத்துமே நம் பேருயிர்க் கிணையதாமே
கூறிடும் வேதமொழியைத் தேறிடில் சோதரர்தாமே
அன்பு பூண்டிடுவோம் அருள் சுரந்திடுவோம் (ஜீ)

மண்ணிலே யுயிர்கள்படும் எண்ணிலாத் துன்பங்கள்
[கண்டே
புண்ணிய நமது வாழ்வை யெண்ணிடா துருகிஈண்டே
இரக்கங் காட்டிடுவோம் இன்பம் ஈட்டிடுவோம் (ஜீ)

ஓடியாடி வேடிக்கையாய் நாடி நம்மை நயந்துநல்ல
காடுமேடு கரம்பில்மேய்ந்து கேடுசூதுகள் யாவுமில்லா
ஊமைப் பிராணிகளே உற்ற தோழர்களே (ஜீ)

தேவதைபலி கேட்டதென்று நாவுருசிக்கே விரும்பி
பாவிகள் பூசாரிகளின் கேவல மொழியை நம்பி
கொலையும் புலையும் வேண்டாம் கொடும் பலியும்
[வேண்டாம் (ஜீ)

(14)

(காந்திரிஷி நம்மைக் காத்திடுஞ் சமரசி என்ற மெட்டு)

பல்லவி.

கொல்லாமையே நாம் கொண்டாடில் மேன்மையே
கொல்லாமையே உயிரைக் கொல்லாமையே

சரணம்.

எல்லா உயிர்களுங்கை கூப்பித் தொழும் பெருமையே
இன்பமொடு அன்புளமே இயற்றுவிக்கும் வாய்மையே
பொல்லாக் குணங்கள் போக்கிப் புனிதராக்குந் தூய்மையே
புண்ணியராய்ப் பிறப்பிகந்து புகுவர் மோக்ஷப் பதவியே
போற்றுவீரே அருளைக் காத்திடுவீரே நீரே
(கொல்லா)

தேவர் தமக்கிந்திரன்திரு மலைகளிலே மேருவாம்
தினகரனே கிரகங்களுக்குத் திகழுமாழி நீருக்காம்
பூவில்வாழ் மாந்தரேற்றிப் புகழுஞ் சக்கிரவர்த்தியாம்

புங்கவன் மறைகளிலே போற்றுஞ் ஜீவகாருண்யம்
புண்ணியரே அன்பை நண்ணியே வாழுவீரே
(கொல்லா)

அரிதரிது மானிடமென் றறைந்த மொழி மறந்தவர்
ஆருயிரைக் கொன்றுநாளும் ஐயோ புண்ணை யருந்துவர்
சிறுதெய்வமெனவே காளி மாரி செல்வி சேவிப்பர்
சிந்தையிலே கருணையின்றி ஜீவஹிம்சை செய்குவர்
சேராதீரே பலி கோராதீரே நேரே (கொல்லா)

(15)

பால கங்காதர திலகரே என்ற மெட்டு.

சீவகாருண்ணிய சீலமே
சிந்தை பெருமின்ப கோலமே
பாவவினை போக்கு மூலமே
பல்லுயிர்க்கு மனுகூலமே (சீவ)

அன்புநிறை மனமேடையதே
ஆண்டவன் நர்த்தன மாடுவதே
புன்புலா லொழித்து வாழுவதே
புண்ணிய பிறப்புண் டாக்குவதே (சீவ)

சமரச சன்மார்க்க போதியே
சத்தியந் தழைக்கும் நீதியே
அமரர்கள் போற்றிடு மாதியே
ஐயனருட் பெருஞ் ஜோதியே (சீவ)

(16)

(சிதம்பரம் போகாம லிருப்பேனோ என்ற மெட்டு).

தெய்வங் கோரப்பலியை விரும்பிடுமோ—அந்த
தீய பிரார்த்தனைக்குளந் திரும்பிடுமோ (தெய்)

ஆதியுஞ் சோதியும் ஆனந்தப பொருளும்
நீதியும் போதமும் நிறைந்துயிர்க் கருளும் (தெய்)

இரக்கமும் உருக்கமும் இலாதுயிர்த் துடிக்க
அறுப்பதும் உரிப்பதும் பூஜையாய்த் துதிக்க (தெய்)

பூவும் பழமும் வைத்துப் பூஜிக்கும் பாதம்
காவும் ரத்தப்புலாலும் காண்பதோ நீதம் (தெய்)

கொலையும் புலையும் விடக் கூறிய வறமொழி
கலையும் மதியும் நிறைமாந்தர்க்கே கண்விழி (தெய்)

(17)

(சுயராஜ்யம் அதிகதூரமில்லை என்ற மெட்டு).

ஐயோ கொடுமை இதை யார் பொறுப்பாரே
அலறித் துடிக்குதையோ அழுது நம் நேரே
வையத்தில் மானிட ஜென்ம மெடுத்த பேரே
வாயில்லாப் பிராணிகளை வதைத்திடில் போரே (ஐயோ)

தோஹைறா.

எண்பத்து நான்கு லக்ஷபேத உயிர்களாமென
வியம்பிடும் வகைகளிலே
இரக்கமும் அன்பும் அறிவும் இறைவ
னின் எண்ணமும் எழிலுடை மோக்ஷமும்
பண்பட்டு வருகின்ற பாக்களும் பரமாதமம்
படித்ததன் பயனடையும்
பகர்தற் கரிதான மானிடப்பிறவியேயெனப்
பாராது உயிர்களை

பாட்டு.

பதைக்கப் பதைக்க வெட்டிப் பலியிடலாமா
பாவியெனப் பெயரைப் படைத்திடலாமா (ஐயோ)

தோஹைரா.

கத்தியைக் கரத்திலேந்தி கழுத்தினை யறுக்க வெண்ணிக்
கால தூதுவனைப்போன்று கடுமையாய் நிற்கக் கண்டே
சத்திய் நெறியைக் கூறி சதி மனங் கரையும் வண்ணம்
சாற்றிட வாயுமில்லா தடுத்திடக் காமுமில்லா சாந்தமாம்-
[பிராணி தம்மை

பாட்டு.

தவிக்கத் தவிக்க வெட்டித் தசை தின்னலாமா
தருமநெறிதவறித் தலை நிற்கலாமா (ஐயோ)

(18)

இராகம்—தன்யாசி—தாளம்—ஆதி.
(நிச்சயமாய் தீர்க்கக் கடன் என்ற மெட்டு).

பல்லவி.

உத்தம ஜென்மத் துதித்த உயர்மதி ஆண்மையாளா
உமக்கிது நியாயமாகுமோ ?

அநுபல்லவி.

புத்தியற்றப் பெண்கள் கூடி
பித்தரா வேசங்க ளாடி
சத்திமாரி தேவி நாடி
சுற்றிடுவர் ஆட்டைத் தேடி (உத்தம)

சரணம்.

குற்றமும் அறிவும் வலி யற்ற ஆடு கோழி தம்மை
கொன்று பலி செய்வதெதற்கு ?
கொக்கரக்கோ அம்மாவெனக் கூவியழத்தலை வெட்டுங்
கோர மூடபக்தி யெதற்கு ?
பெற்றப் பிணியாவும் போக்கப்
பேருலகில் மருந்துண்டு
உற்றநம் விதி மறந்து
உயிர்க் கொலை செய்யலாமோ ? (உத்தம)

(19)

பண்டித மோதிலால்நேரை பறிகொடுத்தோமே என்ற மெட்டு.

பல்லவி.

ஐயையோ தெய்வமே நீ யறியவில்லையோ

அநுபல்லவி.

அறியவில்லையோ மனங் கரைய வில்லையோ (ஐ)

சரணம்.

மெய்ம்மை பிறப்பே பிறந்து
மேன்மை யறமே மறந்து
கையினிலே வாளையேந்தி கழுத்தை வெட்டுகின்றார்
கழுத்தை வெட்டுகின்றார் மனங் களிக்கப் புசிக்கின்றார் (ஐ)

தோஹைறா

எவ்வுயிர்க்குந் தெய்வமொன்று
மெனு முண்மையறியாத பேதையர்கள்
ஒவ்வாத பெயர் கொடுத்தே ஊருக்கொரு
சிறுதெய்வமென உண்டாக்கி
பவ்வியர்போல் பசப்பிடும் பூசாரிகளின்
பதர்மொழியின் வலையிற்பட்டு
செவ்வியரும் மற்றையரும் பலியெனவே
உயிர் மாய்க்குஞ் செய்கையந்தோ

பாட்டு.

செப்பிடவும் வாய் குளரும்
சிந்திக்கவும் மனம் பதரும்
ஒப்பிடவும் உலகில் பாவம் வேறுயில்லையே
வேறுயில்லையே பழி விடுவதில்லையே
அப்பப்பா துடி துடித்து வாய்திறக்குதே
வாய்திறக்குதே கண்ணீர் வடித்தழுகுதே (ஐ)

(20)

(இந்துநேச வங்கதேச பந்துவை என்ற மேட்டு).

இந்தநீதி எங்குஓதி சிந்தையில் பதிந்திரோ
என்னசீலம் என்றுஞாலம் பேசுதே யறிந்திரோ
சந்ததம் சன்மார்க்கந் தனக்குச் சத்துருவாய் வந்திரோ
சாமியால யங்கெடுக்க சந்ததிப் பிறந்திரோ

சக்தியா மென்றே
சாற்றியே சென்றே
பக்தர்போல் நின்றே
பல்லுயிர் கொன்றே—இதை

பார்த்தபேர் மனம் பதைக்க
ஆர்த்த பலியால் துதிக்க (இந்த)

தோஹைரா.

பாரதநாட்டுப் பழம்பெரியார் பண்போ டாலயம்
வகுத்துப் பரந்து நின்ற
பரமனது திருவடியைப் பணிந்தவரின்
சன்மார்க்கம் பயின்று நாளும்
பேரிதய வாக்குசெய லாலொழுகிப் பேரின்பப்
பேறு பெற்று
பிறவி பயனடைய வெனப் பேணி தந்த
பெருங்கோயில் வாயிலெல்லாம்

பாட்டு.

பெருங் கொலைகள் செய்யலாச்சே
பேய் பிசாசு ஆடலாச்சே (இந்த)

தோஹைரா.

ஏசுநாதரை வணங்கியின்புறுங் கிறிஸ்துமத
சோதரரும்
இஸ்லாமத சோதரரும் இறைவனும் அல்லாவை
வணங்கிவரும் பதியிலே
தோஷமுடைக் கொலைபாவத் துன்மார்க்கம்
புரிந்து துதிசெய்யமாட்டார்
தூயரெனப் பேசிவரும் இந்துமதத்
தொகையடங்காக் கோயிலெல்லாம்

பாட்டு.

துள்ளியுயிர்கள் மடியுதந்தோ
தூறிரத்தம் புரளுதந்தோ (இந்த)

(21)

பெரியபாளையத்தின் கோரம்.



(ஆடுபோம்பே விளையாடு பாம்பே என்ற மெட்டு).

பாளையம் ஈதே பெரியபாளையம் ஈதே—சிறு
தேவதையென்றே மயங்கும் (பாளையம்)

மானிட ஜென்மமது   மாட்சிமையென்றே
மறைகளும் உரைகளும்   மதித்து நின்றே
ஈனக்கொலைப் புலையை   இகழ்வீரென்றே
எடுத்துரைத்த மொழிகெடுக்கும் பாளையம் ஈதே
பாளையம் ஈதே பெரிய பாளையம் ஈதே

ஆடவர்க்கும் அரிவையர்க்கும்   மொட்டையடித்து
அழகொழிந்த பாழ்தலையில்   விளக்கையேற்றித்
தேடரிய மானம்போக்கி   ஆடைகளைந்து
தேங்கிட வேப்பிலை கட்டும் பாளையம் ஈதே
பாளையம் ஈதே பெரிய பாளையம் ஈதே

கொண்ட கணவன் காணில்   நாணம் பூண்டே
குளிக்கும் மறைவில்   குலப்பெண்களந்தோ
கண்டவர் நகைக்க   நிருவாணமாகியே
காற்றில் வேப்பிலை பறக்கும் பாளையமீதே
பாளையம் ஈதே பெரிய பாளையம் ஈதே

ஈனமானங் கெட்டவரென்   றிதையேச
இந்துமதம் பெற்றமற்றோ   ரிழிவுகேளீர்
ஊனொடு கள் சாராயம்   உண்ணுஞ்சாமி
உண்டு பலவென்று காட்டும் பாளையம் ஈதே
பாளையம் ஈதே பெரிய பாளையம் ஈதே

பாளையத்தாளென்று பலர்   பக்தி பூண்டு
பதைபதைக்க ஆடுகோழி   தலையறுத்து
ஆலயத்தெதிரே ரத்த   வெள்ளம் ஓட
அநியாயப் பலியிடும் பாளையம் ஈதே
பாளையம் ஈதே பெரிய பாளையம் ஈதே

ஆடையொடு நாகரிகம்   அறிவுமின்றி
அடவி வாழ் வேட்டுவ   கூட்டம் போல

பீடுடைய ஞானங்கள் பெற்ற நாட்டு மக்களை
பேதையராய் ஆட்டுவிக்கும் பாளையம் ஈதே
பாளையம் ஈதே பெரிய பாளையம் ஈதே

சன்மார்க்க சீலராக வாழ வேண்டியே
சாத்திரவேதாகமங்கள் சாற்றியிருக்க
துன்மார்க்கங்கள் பலவும் தூண்டியே விட்டு
தூயரைக் கொலைஞராக்கும் பாளையம் ஈதே
பாளையம் ஈதே பெரிய பாளையம் ஈதே

முக்கண்ணனை மறந்து மூட பக்தியால்
முழுபுரட்டு மாரி செல்வி எல்லைக் காளியைப்
பக்திகொளும் பாவிகளின் மானம் போக்கிப்
பாழ் நரகில் தள்ளுவிக்கும் பாளையம் ஈதே
பாளையம் ஈதே பெரிய பாளையம் ஈதே

(22)

(கலியாணஞ் செய்துவையுமே என்ற மெட்டு).

பெரும் பாவமாகும் பலியே
பேதாயுயிர்க் கொலையே
இருநிலத் துயர்தமக் கியற்கையாம் பிணியே
எவருமழிக்க முடியாதிதை நினையே
உருஉடல் தமில் கோளாருற்றதுஞ் சனியே
உறைந்திடு மாதலால் மருந்தினுல் தணியே

தோஹைறா.

கொள்ளை கொள்ளையாய் மாய்த்துக்
குடிகெடுக்கும் கொடிய
கள்ள வைசூரி பிளேக்குக்
கடியதோர் காலரா முதலிய

பாட்டு.

கடும்பிணி தமைக்காளி மாரியெனக் கொள்ளும்
கயவர்கள் மொழியினைக் கடையெனத் தள்ளும்
மடமை யென்றறிவாளர் மதியாம லெள்ளும்
மன்னுயிரை மாய்க்குமூட மார்க்கத்தை வெல்லும்

(23)

(அடைக்கலமே என்ற மெட்டு)

பல்லவி.

பரிதாபமே பரிதாபமே
பலியிடுங் கோரமாங் கொலையினைப் பார்க்கப் (ப)

சரணம்.

ஒருபாவமுமறியா ஊமைப்பிராணிகளென்றும்
உலகினிலூழியம் புரியுஞ் சீவன்களென்றும்
அறியாத மாந்தர்கள் அம்மன் பிடாரிக்கென்றே
ஆடுகோழிகள் வெட்டும் அநியாயப் பலிவழக்கம் (பரி)

பூமி சூரிய சந்திரன் வாயு வருணதேவர்
புவியினிலுயிர்களைப் பொதுவாய் ரக்ஷித்தருள
நாமங்கள் பல சூட்டி நவிலுஞ் சிறுதெய்வங்கள்
நாதன் வதியுமுயிரை நலியக் கொல்லச் சொல்
லுமோ (பரிதா)

குதிரை மாடாடுபன்றிக் குரங்கு யானைக்கழுதை
கொஞ்சமு மாமிஸமதை நெஞ்சிலு நினைத்திடாவே
மதியாளர் யாங்களென்றே மார்தட்டு மானிடர்கள்
மானமின்றி மன்னுயிரை மடிக்கின்றாருண்
விரும்பி (பரிதா)

---

(24)

முருகன் துதி.

(குமரனே என்ற மெட்டு)

முருகனே நின் அழகுக்கொடியில் மோகமா
யுலவுஞ் சேவல்
அருங்குலமே புரியுநலமே
புகலயெவரே உளரிஞ்ஞாலமே (மு)

தொஹைரா.

ஆழிசூழுலகினி லிரவெலா முறங்கிய
மாந்தரை யெழுப்ப
கோழியின் குலமெலாம் படைத்ததாமெனு
முண்மையைப் பரப்ப

பாட்டு.

கொண்டாடி கொடியிலேற்றாய்
குவலயம் போற்றவிட்டாய்
குமரனே திருமால் மருகனே
அமரனே குறவள்ளியின் மோகனே (மு)

தொஹைரா.

அப்பனே சுப்பிரமணியா ஆரருள் பயந்த
சேவற்கொடியா வென்றே
செப்பிடு மானிடக்கூட்டம் செல்லி மாரித்தேடி
நின் சேவலைக் கொன்றே

பாட்டு.

பலியிடுங் கோரங்கண்டே பதைபதைத்
    தோடி யீண்டே
பாவக்கொலைப் பூஜைபாரை விட்டோட்ட
    மேவித் துதித்தோம் நின்னருளைநாட்ட (மு)

---

(25)

மாரியம்மன் துதி.

(சரவணபவகுக சண்முகநாதா என்ற மெட்டு)

மண்ணுலகம் புகழும் மாரியம்மாளே
மாரியம்மாளே மன்னுயிர்த்தாயாரே (ம)

சிங்கவாகனமேறி செல்வாயருளைக்கூறி
அங்கனமருள்பூண்டு அடைந்தோம் நின்னருள்கோரி (ம)

அம்மாநின் பக்திபூண்டு அன்பும் அருளும்விண்டு
அநியாயக் கொலைசெய்தே அழுகின்றுரையோ ஈண்டு (ம)

மானிடக்கூட்டமம்மா மதியற்றசிலரம்மா
மடிக்கின்றுருயிர்களை மக்கள்பெறுபாவிகளம்மா (ம)

இரக்கமற்றவரம்மா ஈரமில்லாநெஞ்சரம்மா
ஹிம்ஸித்தாடுகோழியை யிடுகின்றுர் பொங்கலம்மா (ம)

அம்மா அம்மாவென்றே ஆடுகோழிகள் நின்றே
அலறியழுங்குரலை அம்மா நீ கேளின்றே (ம)

ஆடுகோழிகள் வெட்டி ஐயையோ ரத்தங்கொட்டி
ஆலயமுன்னே யாறுய்ப் பெருகுதே பாராயெட்டி (ம)

ஊமைப்பிராணிகளம்மா ஒருவருங் கேளாரம்மா
ஓடிவந்தாடுகோழி உயிர்களைக் காருமம்மா (ம)

(26)

(பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது என்ற மெட்டு).

பக்தரே தெய்வங்களைப் பூஜிக்கத் தேங்காய்
பால்பழ மேற்றவையாம்
உத்தமமார்க்க சுருதிகள் சாற்றிய
உண்மை! உண்மை!! உண்மை!!! ஐயா (பக்தரே)

மாரி பிடாரி காட்டேரி மன்னார்சாமி
மாடனைத் தெய்வங்களாக்
கோரிப்பல ஆடு கோழிகளைக் கொல்லல்
கோரம்! கோரம்!! கோரம்!!! அந்தோ (பக்தரே)

குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டாற்போல
கோயில் முன்னே கொலைகள்
பழிக்கச் செய்து புலாலுண்ணும் பக்தியால்
பாவம்! பாவம்!! பாவம்!!! நேரும் (பக்தரே)

கங்கையில் மூழ்கிக் கடவுள் பாதந்தனைக்
கண்மூடி ஓதிடினும்
தங்குயிர் கொன்று தசையுண்போர் நரகில்
சார்வர்! சார்வர்!! சார்வர்!!! ஐயோ (பக்தரே)

இரக்கமும் அன்பும் இலாத மாந்தர் நெஞ்சம்
ஏற்ற இரும்போ கல்லோ
மிரட்டி உயிர் கொல்லுவோர்கள் பிறப்பது
வீணே! வீணே!! வீணே!!! வீணே (பக்தரே)

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்—என்றே
நல்லார் குறளில் நவின்றதோர் நல்லறம்
நாடும்! நாடும்!! நாடும்!!! தேரும் (பக்தரே)

(27)

(நம்பினவர்க்கருள் இன்பந்தரும் ஜேயராமா என்ற மெட்டு)

அன்பு நிறைந்த சிறந்த அறிஞரே வாரீர்
குணந்தேரீர் நலம்பாரீர் (அ)

ஆருயிர் தமை பேருயிரென கோருங்கொள்
கையில் கூடும் புகழ்நாடும் இன்பந்தேடும் (அ)

தோஹைரா.

அஞ்சாத பாவியர் அம்மன் பிடாரியென
ஆடு கோழி வதைப்பர்
நஞ்சாளுலும் நாற்றப்புலாலை நாடி
வயிற்றில் நமன் போலடைப்பர்

பாட்டு.

அந்த—பாவமார்க்கமே மேவுமூர்க்கரின் தாவுஞ்
சேருதல் ஈனம் அக்ஞானம் விழும்வானம் (அ)

தோஹைரா

எண்ணிலாப் பிறவிதமை யெடுத்திந்த
மானிடராய்ப் பிறந்தமையால்
மண்ணில் வாழுயிரனைத்தும் மக்களாம்
தாயாம் தந்தையொடு சுற்றமால்

பாட்டு.

மகிழோடுயிர் சுகமே வாழ பகவனைத்
தொழுவோமே உயர்வாமே பவம்போமே (அ)

(28)

(ராகம் சஹானு—தாளம்—ரூபகம்)

முந்தி ஜென்மப்பகையோ எந்த ஜென்மக்குறையோ
இந்த மானிடர்கையில் இம்சைக்காளாகினேமே (முந்)

ஆடு கோழியானாலும் கேடு ஒருவர்க்கெண்ணோம்
காடுமேட்டில் வளர்ந்தும் கருமம் விடவில்லையே (முந்)

அம்மன் பலிக்கென்று யெம்மை மிகவே கொன்று
கொம்மைகொட்டி யெங்கள் குலத்தை யழிக்கின்றவர் (முந்)

கரும்பு யிருக்கமேலே கரம்பை மேய்க்கடாப்போலே
நிரம்பக் காய்கனியிருக்கெம் நிணத்தை விரும்பி
தின்பார் (முந்தி)

தங்களுடல்புண் கண்டு சங்கை கொள்மந்தாரீண்டு
எங்களுட லுன்மென்று ஏப்பம் விட்டுண்பவர் (முந்தி)

---

(29)

புலால் மறுத்தல்.

இராகம் சேஞ்சுரிட்டி—ஆதி தாளம்.

(நம்பிக்கை கோண்டேல்லோரும் என்ற மேட்டு)

பல்லவி.

மனிதவர்க்கமே பிறந்தும் மனம்
இரும்பாச்சோ மனம்
இரும்பாச்சோ அதன் பிணம்
கரும்பாச்சோ அரும் (மனித)

அநுபல்லவி.

உயிரை மடிக்கின்றீரே அண்ணே—அந்த
உடலெலாஞ் சீழ் ரத்தப் புண்ணே—அதை
மிகச்சிரேட்டமாய் மகிழ்ச்சியோடுணில்
இகழ்ச்சி வேறென்னே! (மனித)

தோஹைரா.

காலில் சிறுகடு முள்தைத்தால்
கண்ணீர் விட்டழுது நின்றே
கடுகெனப் பிடுங்க வேண்டி
கைமுறித் தலறுகின்றீர்
வாளினுல் சிரசை வெட்டி
வாழ்வையே யொழிக்கின்றீரே
வாய்மையோ தருமந்தானே
வஞ்சனை படைத்த பேரே

பாட்டு.

பாழும்—வயிற்றினை வளர்த்திடவேறே—அதோ
வளருதே மரஞ்செடி நேரே—அதன்
வளமறியாமலே புலை மிகவேண்டியே
கொலை புரிகின்றீரே—அரும் (மனித)

(30)

(கோருங்கள் கோருங்கள் என்ற மெட்டு)

பல்லவி.

வேண்டாதீர் வேண்டாதீர் வேண்டாதீரே—புலால்
தீண்டாதீர் தீண்டாதீர் தீண்டாதீரே

அநுபல்லவி.

வேற்றுயிரின் கூற்றமாவீர்
ஆற்றெணுத் துர் நாற்றமேவீர் (வே)

சரணம்

ஆண்டவனடியைப் பூண்டிடவேண்டி
ஆத்துமன்வந்த திம்மானிடமீண்டி
தூண்டுஞ் சிந்தைதன்னைத் தூயவழியண்டி
துன்னியதிரு மன்னுயிரை தன்னுயிரா யெண்ணிக்
[கொலை (வே)

காய்கனிகிழங்கு காய்த்திங்கிருக்க
கருணையிலா துயிருணைப்புசிக்க
வாயில்லா யுயிர்களை வாளாலறுக்க
வாதையினுல் வேதனைபட்டேதமுறின் பாதகமே (வே)

புண்ணெனு முண்மையை யெண்ணிடுமானிடர்
புசிப்பரோ நாற்றப்புலாலைப் புகினிடர்
முன்னோருரைத்ததோர் வாக்கியத்தொடர்
மொழிவேனூனை விழைவோர்வயிற் சுடுகாடென
[கடையாக்கினர். (வே)

(31)

(பாரினிலேபுகழ் பாரதபுத்திரரே என்ற வர்ணமெட்டு)

ஆடு கோழி நண்டு மீனைப் புசிக்கலாமா
ஐயோ மானிடர்க்காமா
தேடரும் ஜென்மம் மறந்திடலாமா
தீயவிலங்காக மாறிடலாமா

தோஹைரா.

எண்ணரும் பிறவிகளில் ஊர்வனவும்
நடப்பனவும் பறப்பனவும் நீந்துவனவும்
மண்ணுலகத்தாயவள்தன் மக்களென
மடிமீது உலவவிட்டுப் பசியாற்ற

வண்ணமுடை மரங்களொடு செடிகளையும்
வளர்த்துமிகக் காய்கனிகள் கரங்களாலே
நன்னயமா யூட்டுவபோன் றியற்கையருங்
காட்சியினை நயந்தறியா மாந்தரேரே

பாட்டு.

கரும்பிருக்க வேம்புத்தேடுங் கயவர்போலே
கண்ணற்றவர் போலே
நிரம்பக் காய்கனிகள் நிற்க முன்னாலே
நீசப்புலாலை விரும்பிப்பேய்போலே (ஆடுகோழி)

தோஹைறா.

(அருட்பா)

மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற் கண்விழித்து
வயங்கு மப்பெண்
ணுருவாணை யுருவாக்கி யிறந்தவரை யெழுப்புகின்ற
வுறுவ னேனுங்
கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங்
கருத்த னேலெங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை ஞானியெனக்
கூறொ ணாதே.

பாட்டு.

என்று மொழிந்த இராமலிங்கர் கவியை
ஏற்காத பாவியை
அன்று படைத்த பிரம்மா வுந்தன் கையை
அறுக்கவே யெண்ணுவா னென்றறி மெய்யை (ஆ)

(32)

(ஏன் வரமாட்டீர் என்ற மெட்டு)

பல்லவி.

ஏன் விடமாட்டீரையா பாழும் புலாலை (ஏ)

சரணம்.

ஈனத்தையுண்டாக்கும் ஈரலைக்கெடுக்கும்
இனிய ஜீரணக்கருவிக் கின்னலைக் கொடுக்கும் (ஏ)

பந்தியில் வாராது பண்பினைத்தாராது
பாழுமூதேவி மூடும் பங்கயத் திருசேராது (ஏ)

தொட்டகையும் நாறும் * துவைத்த சட்டியும் நாறும்
தொடரும் பல் நோய்களும் துன்மார்க்கச் செய்கை [சேரும் (ஏ)

அன்பை அழித்திடும் அருளை ஒழித்திடும்
அறிவை மந்தமாக்கி ஆயுளைக் குறைத்திடும் (ஏ)

இந்துமதங் கெடுமே இறைவனறம் படுமே
இனி வரும் பிறவியிலிருள் நரகத்திடுமே (ஏ)

கொல்லா விரதமொன்றே கொண்டாரைச் சேரும் நன்றே
கோடியுயிர்கள் வாழ்த்தும் கோமானருளுமின்றே (ஏ)

(33)

(தசரதராஜ குமாரா என்ற மெட்டு)

எங்கும் பரந்து நின்ற இறைவா
அருள் உருவா
ஞான நிறைவா
அறம் புகல்வா (எ)

---

* நாறும் என்பது இவ்விடத்தில் துர்நாற்றத்தைக் குறிக்கும்.

பொங்கும் கடலுலகில் புனித ஜென்மங்களென்றே
புகலு மானிடக்கூட்டம் புலாலை விரும்பி நின்றே
சிங்கங் கரடிபோல சிறிய ஜெந்துக்கள் கொன்றே
சீல மிகவழிந்து போனார்
ஜென்மம் நாணார்
எமனு னார்
இன்பங் காணார் (எ)

கங்கையில் மூழ்கியே கடவுளே யென்றுமே
காலையுமாலையுங் கண்மூடி ஜெபித்துமே
சங்கையில்லாத ஞான சாஸ்திரம் படித்துமே
சண்டாளராகி உயிர்க்கொன்றே
ஊனைத் தின்றே
பக்த ரென்றே
பகர்வார் நின்றே (எ)

தன்னுயிர் நீப்பினும் மன்னுயிர் காப்பதே
தருமநெறியெனுந் தகைமொழி தப்புதே
மன்னுயிர் தமைக்கொன்றே தன்னுடல் வளர்ப்பதே
மனிதரெனுந் தலைகீழ் காலம்
என்ன கோலம்
கொலை ஞாலம்
ஈன சீலம் (எ)

உறங்கினவர் விழிப்ப துண்மையில்லாததாலே
உடலை வளர்க்கப்பாழும் ஊனைப் புசிக்காமலே
மரங்களுஞ் செடிகளும் மலிந்திருப்பதாலே
மகிழ்ந்துண்டு வாழ்ந்திடலாலே
மதியாமே
சுத்தமாமே
பாவம் போமே (எ)

(34)

(இப்படிப் புலம்புவது ஏன் என்ற மெட்டு)

பல்லவி.

இப்படியு மாறலாகுமோ— மாந்தர்க்
கிணையான பிறவிகளிலே யெனும் உரைகெட (இப்)
மானிடராகப் பிறந்தும் ஊனுண்ணுங் கொடியராகி (இப்)

அநுபல்லவி.

ஒப்பிலாவறமதிலே உயிர்க்கொலைத் தவிர்த்தலே
செப்பிசிறப்பித்ததாலே சிந்தைதனிற் கொள்ளாமலே(இப்)

சரணம்.

அன்பருள் தயைபூண்டு ஆருயிர் வாழத்தொண்டு
இன்பமாய்ப் புரியாது இறக்க உயிர்தமை
அறுத்துப் புசிப்பதா (இப்)

மாடாடு பன்றி கொன்று மகிழ்வாகப் புண்ணைத்தின்று
கேடுவிளைக்குந் துஷ்ட சிங்கம் சிறுத்தை
பொங்கும் புலியென (இப்)

---

(35)

தீபாவளிப் பாட்டு.

(ஹக்கியப்பியாரே என்ற ஹிந்துஸ்தான் மெட்டு).

தீபாவளி யெனுந் தெய்வத் திருநாளைத் தீயதாக்காதீர்
ஐயா தீயதாக்காதீர்—நல்ல (தீ)

நீட்டியே கத்தியைத் தீரமாய்த் தாங்கி
திரியுமாடு கோழி பன்றி மேலோங்கி
வாட்டி யவைகளி னுயிர்தமை வாங்கி
வழியுஞ் சீழ் புண்ணினைப் புசித்துமே பொங்கி
—தீயதாக்காதீர்—நல்ல (தீ)

பகுத்தறி வேயில்லா சிங்கம் நாய் நரியும்
பாயும் புலி சிறுத்தைப் பறந்திடுங் கழுகும்
செகுத்து பிறவுயிரின் பிணத்தினை விழுங்கும்
செயலைப் போல் மானிடம் மிருகமதாகிடும்
—தீயதாக்காதீர்—நல்ல (தீ)

மனிதப் பிறவியதன் மாண்பினை மறந்து
மறம்புறிந் தழியாது மறைநெறி யறிந்து
புனிதராக விது நாளெனத் தந்து
போந்ததை யறியாமலுயிர்க் கொலை புரிந்து
—தீயதாக்காதீர்—நல்ல (தீ)



(36)

ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதருக்குப் பசுக்களைப் பிரார்த்தனைக்கு விடுகிறார்கள். அவைகளைக் கோயிலதிகாரிகள் ஏலத்தில் விடுவதால் கசாப்புக் கடைக்காரர்கள் எடுத்து கொலை செய்கிறார்கள். அக்கொடும் பிரார்த்தனையை விடும்படி வேண்டல்.

(பண்டித மோதிலால் நேரை என்ற மெட்டு)

பரந்தாமன் அருளைவேண்டி பக்தி பூண்போரோ
பக்தி பூண்போரே பரன் சக்தி காண்போரே (பர)

புரந்தரர் புகழும் கோயில்
புண்ணிய ஸ்ரீரங்கம் வாயில்
வரந்தர வேண்டி பசுக்கள் வழங்கி வந்தீரே
வழங்கி வந்தீரே அதன் வதை மறந்தீரே (பர)

தோஹரா.

அந்நாளில் எம்பெருமான் ஆக்கூட்
டந்தனிலாடி நின்ற காட்சி
எந்நாளும் காணவென இறைவனின்
சந்நிதியில் பசுக்களோட்டி
பன்னாளும் போற்றிவரும் பண்டைய
நாள் பக்தியெலாம் மறைந்து மாயும்
இந்நாளில் கோக்கள்படும் ஹிம்சையினை
யறியீரோ இருநிலத்தீர்

பாட்டு

பொன் விரும்பி விலை புகல்வார்
புவியில்பலர் அவை பெறுவார்
அன்பரியா கொலைஞரிடை அல்லல் படுதே
அல்லல்படுதே ஆவி அலறி விடுதே
இன்பமென கோயிலிற் பசு இனி விடாதீரே
இனி விடாதீரே நரக இருள் விழாதீரே (பர)

(37)

(தசரதராஜ குமாரா என்ற மெட்டு)

திருவரங்கப் பெருமானே தேவர் கோனே
கோ குலனே குறை தீர்ப்போனே (திரு)
அரும்பெருங் குழவிபோல் ஆவினங்களணைந்தே
அன்றுகாத்த நினைவால் அரங்கா உனைப்பணிந்தே

ஒருவரம் அருளென ஊமைப் பசுக்கள் சேர்ந்தே
உயிர்வரங் கேட்டிடும் காலம்
என்ன கோலம்
பொருள் மூலம்
பொய்க்குஞ் ஞாலம் (திரு)

பசுவினுடலமெங்கும் பலப்பல தேவர்கள்
பண்போடுறைவாரென்றே பக்தியோடிந்து மக்கள்
வசையிலாது வணங்கி வாழ்த்தித் துதித்தபேர்கள்
வஞ்சனை நினைத்திடலானார்
வாழ்வைப் பேணார்
பக்தி பூணார்
பாவக் கண்ணார் (திரு)

பாலும் எருவோடேரு பணித்த உழைப்பை வாங்கி
பயிரைவளமதாக்கிப் பசியும் வறுமை நீங்கி
தோலெலும்பாகி எறு துணைபுரியாதென்றேங்கி
துரத்தடித்தோட்டுங் கோர காட்சி
தோஷ ஆட்சி
நன்றி மாட்சி
நகைக்க லாச்சு (திரு)

அரங்கனை வேண்டியே ஆவினங்களை யோட்டி
ஆலய கோக்களென்றே அருநாமங்கள் சூட்டி
கரங்குவித்தே வணங்குங் காலமெலாந் தட்டி
காசின்மேலாசை மிகபட்டே
கருணையற்றே
கொலைஞர் கைவிற்றே
குதிப்பர் பொருள் பெற்றே. (திரு)

---

(38)

எல்லம்மனை ஆடு கோழிகள் வேண்டல்.

(காம்போதி)

பல்லவி.

இறைவியே எல்லம்மா எழிலடி பணிந்தோம் வந்தருள்.

சரணங்கள்.

குறைகள் முன்னம் பல கோடி யிழைத்தே
  கோழி ஆடுபன்றி யாகிப் பூதலத்தே
பிறந்து நின்முன்னாலே வந்ததாபத்தே
  பித்தரின் சித்தத்தை நித்தந்திருத்துவாய் (இறை)
அம்மா நின்பூஜைக்கு மாதமோ ஆடி
  ஐயோ நாங்களெல்லாம் மடிவது கோடி
சும்மா நீ பார்த்திருப்ப தென்னமோடி
  சுந்தரி மைந்தரை சந்ததம் சிந்தைசெய் (இறை)
குட்டிக் குலங்களை விட்டுப்பிரிந்து
  குய்யோ முறையோ வென்றலறி விழுந்து
எட்டு திக்குந்துள்ள வெட்டுவதறிந்து
  எழுந்துன் குழந்தைகள் தழுவித்தொழுதோம் (இறை)
பூசாரிக் கூட்டங்களுள் பேரில்பாரம்
  பூவையரே வைத்துச் செய்கிறார் கோரம்
கூசாமற் கொல்வதைக் கண்டு கொடூரம்
  கொண்டு சண்டாளருக் குண்டுபண் தண்டனை (இறை)
சென்னை ஜீவரக்ஷா சங்கத்திற் தொண்டு
  செய்யும் பறம்பை ஸ்ரீபலன் சொல்கொண்டு
உன்னைத் துதித்தோமன்புடன் கண்டு
  உலகினிற் பலியெனுங்கொலையினை விலகச்செய் (இறை)

The Rampaul Press, Madras.—2,000.

எமது புத்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை ...	0	4	0
கலியுகப் பிரகலாதன்	0	4	0
ஜீவகாருண்யத் திறவுகோல்	0	0	3
பொன்னுலக நாதனின் பூவுலகத்தொண்டர்கள்	0	0	6
உயிர் வகைகள்	0	0	3
மாரியம்மன் திருவாய்மொழி	0	0	3
புத்த விஜயம்	0	2	0
கிள்ளை விடு தூது	0	0	3
மதிபெற்ற சிந்து	0	0	3
அஹிம்ஸை	0	0	6
ஜீவகாருண்ய பன்னூற்றிரட்டு	0	2	0

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபை,

436, தங்கசாலைத் தெரு,

சென்னை.

ராம்பால் பிரஸ், சென்னை—2,000.